(கு.வி.மு.ச.அத்தியாயம் XXIII)

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், இராதாபுரம்

| | | |
|---|---|---|
| ஆண்டுப்பட்டிகை<br>பல்வகை<br>முதன்மைப் பதிவேடு<br>அமர்வு | } | STC.No.201/2022 |

வாதிதரப்புக்காக சாட்சியின் சான்றுரைகள் PW– 1

| | | |
|---|---|---|
| பெயர் | : | குமரேஷ் |
| க/பெ | : | சுயம்புலிங்கம் |

(எதிரி ஆஜர்)

2023ம் ஆண்டு ஜீலை திங்கள் 28 ஆம் நாளன்று, 1969 ஆம் ஆண்டு உறுதி மொழி சட்டம் (மையச் சட்டம் 44/1969)–ன் வகைமுறைகளுக்குட்பட்டு உளமார உறுதியளிக்கப்படுகிறது.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

1. சென்னை ஸ்டீல்ஸ் நிறுவனத்தை தொடங்கி நான்கு வருட காலம் ஆகிறது. நிறுவனம் தொடர்பான ஆவணம் எதையும் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவில்லை. விநாயக ஸ்டீல்ஸ் என்பதை எனது தங்கை கணவர் நடத்தி வரும் நிறுவனம் ஆகும். இரும்பு கம்பிகள் மொத்தம் மற்றும் சில்லரை வியாபாரம் செய்து வருகிறேன். எதிர் மனுதாரர் ஈரோட்டை சார்ந்தவர். எதிரி வியாபாரம் நிமித்தம் காரணமாக என்னை தொடர்பு கொண்டார். எதிரிக்கும் எனக்கும் 2021 ம் ஆண்டு முதல் பழக்கம். தற்போது சாட்சி 2020 முதல் எதிரியை தெரியும் என்று கூறுகிறார். எனது நிறுவனத்தில் 10 நபர்களுக்கு மேல் தொடர்ந்து கொள்முதல் செய்து வருகிறார்கள். 2020 முதல் எதிரி என்னுடன் வியாபாரம் செய்து வருகிறார். நான் செய்து வரும் தொழிலை போல் ஈரோட்டிலும், ஈரோட்டிலிருந்து

நீங்கள் தொழில் செய்யும் இடம் வரை உங்களை போல் பல்வேறு நபர்கள் செய்து வருகிறார்கள் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. திசையன்விளைலிருந்து ஈரோட்டிற்கு சுமார் 420 கி.மீட்டர் உள்ளது. மேற்படி இரண்டு ஊர்களுக்கு இடையே உங்களை போல் இரும்பு வியாபாரம் 100 க்கு மேற்பட்ட நபர்கள் செய்து வருகிறார்கள் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது.

2. பொதுவாக கொள்முதல் செய்யும் நபர் தனக்கு அருகில் கொள்முதல் செய்யும் வசதி என்றால் சரிதான். நான் கொடுக்கும் இரும்பு தரம் மற்றும் அதை பொருட்கள் ஈரோட்டிற்கு அருகில் கிடைக்கும் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. எதிரி தான் என்னை அணுகி வியாபாரம் செய்ய தொடங்கினார். முதன் முதலில் எதிரியை எப்போது பார்த்தேன் என்றால் தற்போது நினைவில்லை. எதிரியை போல் பல்வேறு நபர்கள் வியாபாரம் செய்து வருகிறார்கள் என்றால் சரிதான். ஒரு நாளைக்கு 10 சில்லரை மற்றும் மொத்த வியாபாரம் நடக்கும் என்றால் சரிதான். எனது வியாபாரத்திற்கு நான் ரசீது கொடுக்கும் வழக்கம் உண்டு. எனது வியாபாரத்திற்கு முறையாக GST செலுத்தி வருகிறேன். எனக்கும் எதிரிக்கும் இடையே மொத்த கொள்முதல் நான் டெலிவரி செய்தவுடன் காசோலை மூலமாக தொகை செலுத்த வேண்டும் என்று பேசி கொண்டோம். மேற்படி வியாபாரம் நம்பிக்கையின் அடிப்படையில் நடைபெறுவது ஆகும். செக்யூரிட்டி எதுவும் பெறவில்லை. எதிரி நடத்தும் கடைக்கு சென்று பார்த்துள்ளேன்.

3. நான் பலமுறை தொழில் நிமித்தமாக எதிரியின் கடைக்கு சென்றுள்ளேன். கடந்த 4 வருடங்களுக்கு முன்பு சென்றேன். எதிரி உங்கள் நிறுவனமான சென்னை ஸ்டீல்ஸ் மற்றும் மற்றொரு நிறுவனமாக விநாயகா ஸ்டீல்ஸ் நிறுவனத்தில் கடந்த 10 வருடமாக வியாபாரம் செய்து

வருகிறார். மேற்படி வியாபாரம் நிமித்தமாக அவர் பலமுறை செக்யூரிட்டிக்காக நிரப்பப்படாத கையொப்பம் செய்த காசோலையை கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. முதல் தவணை பணத்தை இரண்டாவது கொள்முதல் செய்யும் போது செலுத்த வேண்டும் என வாய்மொழி ஒப்பந்தம், பொதுவான ஒரு நபர் தொடர்ந்து வியாபாரம் செய்து வந்தால் அவருக்கு தனியாக கணக்கு புத்தகம் தொடங்கி கொள்முதல் செய்த தேதி வரவு வைக்கப்பட்ட பணம் குறிக்கப்பட்டது என்றால் சரிதான். எனக்கும் எதிரிக்கும் இடையேயான வியாபாரம் கணக்கு புத்தகம் தாக்கல் செய்யவில்லை. கணக்கு புத்தகத்தை தாக்கல் செய்தால் எதிரி செலுத்திய தொகைள் அதில் வரவு வைக்கப்பட்டிருக்கிறது என்றும் அதில் எதிரி பாக்கி தொகை எதுவும் செலுத்த வேண்டியதில்லை என்பதால் தான் அதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யாமல் மறைத்து உள்ளேன் என்றால் சரியல்ல.

4. நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள ரசீது(மா.சா.ஆ.5) பிரகாரம் தான் எதிரி எனக்கு பணம் தர வேண்டியுள்ளது. ம.சா.ஆ.5 ல் எனது கையொப்பம் இல்லை என்றால் சரியல்ல. தற்போது சாட்சி மேற்படி ஆவணத்தில் அவரது கையொப்பம் இல்லை என்று குறிப்பிடுகிறார். நீங்கள் சென்னை ஸ்டீல் நிறுவனத்தின் நிறுவனர் கிடையாது என்றாலும் ம.சா.ஆ.5 தாக்கல் செய்ய உங்களுக்கு உரிமை இல்லை என்றால் சரியல்ல. ம.சா.ஆ.5 ல் கண்ட 15.12.2020 தேதியிட்ட ரசீதில் அதன் Invoice No 6 என்று என குறிப்பிடப்பட்டுள்ளது என்றாலும் 28.12.2020 ம் தேதியிட்ட ரசீது 8 என்று குறிப்பிட்டுள்ளது என்றாலும் மேற்படி 2 தினங்களுக்குகிடையே உங்களுக்கு ஒரு வியாபாரம் தான் நடைபெற்றுள்ளது என்றால் தற்போது நினைவில்லை. மேற்படி ரசீதில் Invoice No 9 ம் அவருக்கு கொடுக்கப்பட்டுள்ளது என்றாலும் சரிதான்.

கூடுதலாக கொள்முதல் செய்ததால் கொடுக்கபட்டிருக்கும். 07.01.2021 தேதியிட்ட Invoice No 14 மூலம் பொருட்கள் அனுப்பி இருக்கிறேன் என்றால் சரிதான்.

5. 29.06.2021 ம் தேதியில் Invoice No 15 மூலம் பொருட்கள் அனுப்பியிருக்கிறேன் என்றால் சரிதான். மேற்படி 2 தினங்களுக்குகிடையே வியாபாரம் நடைபெறவில்லை என்றால் இருக்கலாம் புதிய கொள்முதல் எதுவும் கொடுத்திருக்கமாட்டேன். 19.01.2021 தேதியிட்ட Voucher No.13 மூலம் எதிரிக்கு நான் வியாபாரம் செய்தேன் என்றால் சரிதான். 07.01.2021 ம் தேதியில் Invoice No. 14 ன் வியாபாரம் செய்த பின்பு 19.01.2021 ல் Invoice No 13 ன் படி வியாபாரம் செய்தேன் என்றால் சரியல்ல. Invoice No 14 ன் படி வியாபாரம் செய்ய பின்னிட்டு Invoice No 13 ன் படி வியபாரம் செய்ய வாய்பில்லை என்றால் சரியல்ல. ம.சா.ஆ.5 ல் Invoice ல் மேற்படி வியபாரம் கடனுக்கு கொடுக்கப்பட்டுள்ளதா அல்லது பணம் கொடுத்த ரசீது கொடுக்கப்பட்டுள்ளதா என்று குறிப்பிடப்படவில்லை என்றால் அதை பற்றி தற்போது நினைவில்லை, ம.சா.ஆ.5 ரசீதுகளில் வாகனம் எண் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான் மேற்படி வாகனத்தில் பொருட்கள் கொண்டு செல்லப்பட்டுள்ளது என்று நிரூபிக்கும் பொருட்டு ஆவணம் எதையும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

6. எதிரி என்னிடம் என்ன பொருள் வேண்டும் என்பதை கடிதம் மூலமாகவோ எழுத்து மூலமாகவோ, தொலைபேசி வாயிலாகவோ கொள்முதலுக்காக கேட்டார் என்பதனை காண்பிக்கும் ஆவணம் எதையும் தாக்கல் செய்யவில்லை. ம.சா.ஆ.5 ல் குறிப்பிடப்பட்டுள்ள வாகனம் அன்னைற தினம் திசையன்விளைலிருந்து ஈரோடு சென்றதா என்பதனை டோல்கேட்டில் ஆய்வு செய்தால் தெரிய வரும் என்றால் சரிதான். எனது

நிறுவனத்தில் CCTV கேமரா கிடையாது. எனது வழக்கின் படி 25.11.2021 அன்று எதிரி உங்கள் அலுவலகத்தில் நிரப்பி கொண்டு வந்த காசோலைகளை உங்கள் முன்பு கையொப்பம் செய்து கொடுத்துள்ளார் என்றால் சரிதான், உங்கள் கடையின் அருகே உள்ள கடைகளில் CCTV கேமரா உள்ளது என்றால் அதை பற்றி தெரியவில்லை. CCTV கேமரா இருந்தால் எதிரி அன்றைய தினம் அலுவலகத்திற்கு வந்தாரா என்று தெரிய வரும் என்றால் சரிதான். எதிரியிடம் பாக்கி எவ்வளவு தொகை தர வேண்டும் என்று அழைபேசி மூலம் தெரிவித்துள்ளேன். எதிரியின் அழைபேசியின் எனக்கு பாராமல் தெரியாது, எனது அழைபேசியில் சேமிக்கப்பட்டுள்ளது. எனது அழைபேசி எண் 9941811234 ஆகும்.

7. உங்களது அழைபேசியிலிருந்து தொடர்பு கொண்டது கிடையாது என்றால் சரியல்ல. மேற்படி விபரத்தை அழைப்பு விவரத்தை பார்த்தால் தெரிய வரும் என்றால் சரிதான். எதிரி என்னுடன் உங்களுடன் எதிரி வியபாரம் செய்யவில்லை என்பதால் அவரை நிர்பந்தபடுத்த அவர் வியபாரம் செய்யும் போது கையொப்பம் செய்து கொடுத்த நிரப்பபடாத கசோலைகளை பயன்படுத்தி எதிரி பாக்கி தொகை செலுத்த வேண்டியுள்ளது என்று பொய்யாக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. ம.சா.ஆ.1 ல் உள்ள கையொப்பம் 25.11.2021 ல் போடப்ப்ட்டுள்ளதுா இல்லை அதற்கு முன்பு போடப்பட்டுள்ளதா என்பது தெரிய வரும் என்றால் சரிதான். அதை பகுப்பாய்வுக்கு அனுப்ப எனக்கு ஆட்சேபனை இல்லை. STC.No. 199/2022 எதிரியின் மகன் மீது நான் புகார்தாரராக இருந்து தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். எதிரி ம.சா.ஆ.1 ஆவணத்தை சட்டப்படியான கடனுக்கு உங்களுக்கு கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. அதனால் உங்கள் வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.